

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், நேற்று (21.6.2025) உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டும் விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், நேற்று (21.6.2025) உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டும் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் "சிங்கம்" சிலையை நினைவுப் பரிசாக வழங்கினார்கள்.

### கடந்த 2 ஆண்டுகளில் '100 நாள் வேலைத்திட்டத்திற்கு'

# தமிழ்நாட்டிற்கான நிதி பாதியாக குறைப்பு!

## ஒன்றிய அரசின் நடவடிக்கையால் மனித உழைப்பு நாட்களும் குறைந்துவிட்டது!

**சென்னை, ஜூன் 22-**

**100நாள் வேலைதிட்டத்தில், தமிழகத்திற்கான நிதி கடந்த 2 ஆண்டுகளில் பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவில் வறுமையை குறைக்க கிராமப்புற மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலைவாய்ப்பு திட்டம் என்று சொல்லப் படும் நூறு நாள் வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 100 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும். இந்த திட்டம் தொடங்கப்பட்ட போது கண்மாய் மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் மட்டுமே நடந்தது. ஆனால் இப்போது கிராமத்தில் பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் பொது கட்டிடங்கள் கட்டுவது மற்றும் பிரதமரின் வீடு திட்டம் உள்ளிட்டபணி களும் நடக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ் வேலை பார்க்க நாடு முழுவதும் 11 கோடியே 96 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர். ஒவ்வொரு மாநிலத்திற்கு ஏற்ப தினக் கூலி வழங்கப்படுகிறது. மத்திய அரசு இந்தத்திட்டத்திற்காக கடந்த 2020-21ம் ஆண்டில் ரூ. 1லட்சத்து 12. ஆயிரம் கோடி, 2021-22ம் ஆண்டில் ரூ.98 ஆயிரத்து 467 கோடி 2022-23ல் ரூ. 90 ஆயிரத்து 810, 2023-24ல் 89 ஆயிரத்து 268 கோடி, 2024-25ல் ரூ.82ஆயிரத்து 421 கோடியை விடுவித்துள்ளது.

தமிழகமே முன்னிலை அதில் கவனிக்கத்தக்க மற்றொரு விஷயம் என்றால் இந்தவிடுவிக்கும் தொகையை ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய பட்ஜெட்டில் கூடுதலாக தான் நிதி ஒதுக்குகிறார்கள். அதாவது பட்ஜெட்டில் ஒதுக்கும்நிதியை விட விடுவிக்கும்தொகை மிக குறைவாக இருக்கிறது. உதாரணமாக கடந்த 2024-25ம் நிதியாண்டில் பட் ஜெட்டில் இந்த திட்டத்திற்கு ரூ.86 ஆயிரம் கோடி ஒதுக்கீ செய்யப்பட்டு இருந்தது. ஆனால் அந்தாண்டு விடுவித்த தொகை வெறும் ஆயிரத்து 421கோடி தான், அதன்படி, இந்தாண்டும் (2025-26) பட்ஜெட்டில் ரூ 86ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து இருக்கிறது. ஆனால் அதில் கடந்தாண்டை விட மிக குறைவாக ரூ.80ஆயிரம் கோடிஅளவுக்கு தான் விடுவிப்பார்கள் என்று தெரிகிறது மத்திய அரசின் இந்த நிதி குறைப்பால் தமிழகம் தான் அதிகம் பாதிக்கப்படுகிறது. ஏனென்றால் 100 நாள் வேலை திட்டத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தமிழகத்தை விட பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் ஆகியவை முன்னிலையில் இருந்தாலும், வேலை திறனில் தமிழகமே முன்னிலை வகிக்கிறது. அதாவது கடந்தாண்டு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10.31சதவீதம் வரை பெற்று தமிழகமே முதன்மை மாநிலமாக திகழ்கிறது.



ஒன்றிய அரசு, இந்தத்திட்டத் திற்காக கடந்தாண்டும். இந்தாண்டும் பட்ஜெட்டில் ஒதுக் கிய தொகை ஒரே தொகையாக இருந்தாலும் அதில் தமிழகத்திற்கு வழங்குவதற் கான தொகை மட்டும் வெகுவாக குறைந்து விட்டது. அதாவது கடந்த 2023-24ம் ஆண்டில் தமிழகம் ஒன்றிய அரசிடம் இருந்து மொத்தம் ரூ.12 ஆயிரத்து 136 கோடி நிதி பெற்றது. ஆனால் கடந்த ஆண்டில் வெறும் ரூ.7 ஆயிரத்து 583 கோடிதான் நிதி பெறப்பட்டது. இந்தாண்டில் இது ரூ.3 ஆயிரத்து 200 கோடி என்ற அளவில் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. இதில் பணிகள் கூடுதலாக செய்தால் மேலும் கூடுதல் நிதி ஒதுக்க வாய்ப்பு உள்ளது. அப்படி இருந்தாலும், அதிகபட்சமாக ரூ.6ஆயிரம் கோடி மட்டுமே கிடைக்கும் என்று தெரிகிறது.

இதுகுறித்து தமிழக அரசு அதிகாரிகள் கூறியதாவது:-

100 நாள் வேலை திட்டத்தில் தமிழகத்திற்கான நிதி தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகிறது. அதனால்பொருட்கள் வாங்குவதற்கான செலவு மட்டுமின்றி மனித உழைப்பு நாட்களும் வெகுவாக குறைந்து விட்டது. கடந்த 2023-24ம் ஆண்டில் தமிழகம் 40 கோடி மனித நாட்கள் உழைப்பு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் கடந்தாண்டு ஒன்றிய அரசு 2024-25ம்ஆண் டில் தமிழகத்திற்கு 20 கோடி மனித நாட்கள் மட்டுமே அனுமதித்தது. ஆனால் இந்த இலக்கினை தாண்டி தமிழகம் 29 கோடி மனித நாட்கள் பணி செய்தது.

ஆனால் இந்தாண்டு தமிழகத்திற்கு வெறும் 12 கோடி மனித உழைப்பு நாட்கள்தான் என்று நிர்ணயம் செய்யப்பட் டுள்ளது. இது மிக, மிக குறைவாகும். எனவே தமிழக அரசின் எதிர்ப்பை பதிவு செய்து இருக்கிறோம். அதன் தொடர்ச்சியாக 12 கோடி என்பது 20 கோடியாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அப்படியென்றாலும் இது 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பாதியாக குறைந்து விட்டது.

தமிழகத்தில் மொத்தம் 100 நாள் வேலை திட்டத்தில் சுமார் 70 லட்சம் குடும்பங்கள் பதிவு செய்து இருக்கிறார்கள். அதில் கடந்த 202324ம் ஆண்டி 3 லட்சத்து 97 ஆயி ரத்து 98 குடும்பங்களுக்கு மட் டுமே முழுமையாக 100 நாட் கள் வேலை வழங்கப்பட்டது. இது 2024-25ம் ஆண்டில் 1 லட்சத்து 18 ஆயிரத்து 515 ஆக குறைந்துவிட்டது. இந்த நிதி யாண்டில் மேலும் நிதி குறைக் கப்பட்டுள்ளதால், இந்த எண் ணிக்கை மேலும் பாதியாகி விடும். சராசரியாக தமிழகத்தில் ஒரு குடும்பத்துக்கு அதிக பட்சமாகவே 35 நாட்களுக்கு மேல் வேலை வழங்க முடி யாது என்ற நிலை ஏற்பட்டுள் ளது. இந்தாண்டு தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் ஒரு நாள் கூலியாக ரூ.336 வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### காலனி ஆதிக்கத்தின் நினைவுச் சின்னம் அல்ல!

# ஆங்கிலம் - முன்னேற்றத்திற்கான உலகளாவிய கருவி!

## அமித்ஷாவுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலடி!

**சென்னை, ஜூன் 22-**

**அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு அவசிய மொழியாக ஆங்கிலம் மாறி விட்டதாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.**



ஆங்கிலம் பேசுபவர் வெட்கப்பட வேண்டும் என்ற உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சுக்கு தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

தற்போதைய நிலையில் ஆங்கிலம் காலனி ஆதிக்கத்தின் நினைவுச் சின்னம் அல்ல என்றும், அது உலகளாவிய முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான், கொரியா, இஸ்ரேல், ஜெர்மனி போன்ற நாடுகள், காலனி ஆதிக்கத்தின் தொடர்ச்சியாக பார்ப்பதற்கு மாறாக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகத்தில் முன்னணியில் இருப்பதற்காக ஆங்கிலத்தை கற்றுத் தருவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், வலு வான தேசியப் பெருமிதம் கொண்டுள்ள சீனா கூட, தனது வளர்ச்சிக்கு ஆங்கிலத்தை அவசியமாகக் கருவதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள அமித்ஷாவும், ஆர்.எஸ். எஸ்ஸும் மேட்டுக்குடிகளின் மொழியாக ஆங்கிலத்தை சித்தரிக்க விரும்புவதாகவும், அது நமது கலாச்சாரத்திற்கு தீங்கு விளைவிப்பதால் அல்ல, மாறாக ஏழைகள், தலித்துகள் மற்றும் பிற்படுத்தப் பட்ட சமூகங்கள் எழுச்சி பெற ஆங்கிலம் அதிகாரம் அளிப்பதால்தான் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் விமர்சித்துள்ளார். ஒரு காலத்தில் சமஸ்கிருதம் இருந்ததைப் போல், தற்போது ஆங்கிலம், மக்களுக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவதாக வும், இது மொழி சம்மந்தப் பட்டதல்ல, இது மக்களை கட்டுப்படுத்துவதை நோக்கமாக கொண்டது என்று அன்பில் மகேஸ் சுட்டிக் காட்டி உள்ளார்.

அனைவருக்கும் சம வாய்ப்பு என்பதில் திமுக நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், இன அடையாளத்திற்காக தமிழும், வாய்ப்பிற்காக ஆங்கிலமும் தேவை என்றும், இதன் காரணமாகவே தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு மொழிகளும் கற்பிக்கப் படுகிறது என்று அவர் கூறியுள்ளார். மொழி ஒரு தடையாக இருக்கக் கூடாது, ஒரு ஏணியாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அமித்ஷாவின் பயம் ஆங்கிலத்தைப் பற்றியதல்ல, அது சமத்துவம் மற்றும் வளர்ச்சிக்கு எதிரானது என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில்

# பா.ஜ.க.வினால் காலூன்ற முடியாது!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அகில இந்திய பொதுச்செயலர் எம்.ஏ.பேபி உறுதி!

சென்னை, ஜூன் 22-

தமிழகத்தில் ஒரு போதும் பா.ஜ.க.வால் காலூன்ற முடியாது என மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலர் எம்.ஏ.பேபி கூறினார்.



மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் ஜூன் 11 முதல் ஜூன் 20 வரை பிரச்சார இயக்கம் நடைபெற்றது. இதன் நிறைவுக் கூட்டம் சென்னை அம் பத்தூர் ஓ.டி. பேருந்து நிலையம் அருகில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வட சென்னை மாவட்டச் செயலர் எம்.ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், எம்.ஏ. பேபி பேசியதாவது:-

பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு, முதலாளிகளுக் கான அரசாக செயல்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளாக பிரதமர் மோடி தவறான வாக்குறுதிகளை கொடுத்து, மக்களை ஏமாற்றி வருகிறார்.

ஒன்றிய அரசின் கொள்கைகளுடன் ஒத்துப் போகாத மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

இதனால், ஜிஎஸ்டியை பங்கிட்டு கொடுப்பதில் கூட மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்கின் றனர். தமிழகத்தில் இந்தியை கட்டாயமாக்க

முயற்சித்தார்கள். அந்த முயற்சி தோல்வியடைந்தது. தற்போது ஆங்கிலம் பேசுவதைக் கூட அவமானமாக பார்க்கின்றனர். ஆங்கிலம் கற்றால் நாடு வளர்ச்சி அடைந்து விடும் என்பதால், ஆங்கிலத்தை எதிர்க்கின்றனர்.

தமிழகத்தில் கீழடி அகழ்வாராய்ச்சியை கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தேர்தல் வருகிறது என்றவுடன் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவ்வப்போது தமிழகம் வந்து கொண்டிருக்கிறார். தமிழகத்தில் பா.ஜ.க.வால் ஒரு போதும் காலூன்ற முடியாது. தமிழகம், கேரளம் போன்று இந்தியாவில் மதச்சார்பற்ற அரசு அமைய வேண்டும் என்றார்.

கூட்டத்தில் கட்சியின் மாநி லச் செயலர் பெ. சண்முகம், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் உ.வாசுகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை ஒரகடத்தில்

# 'ஃபாக்ஸ்கான்' மேலும் ஒரு ஆலையத் தொடங்குகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் முதலீடுகள் குவிகிறது!

சென்னை, ஜூன் 22-

சென்னை ஒரகடத்தில் புதிய உற்பத்தி பிரிவை தொடங்க உள்ளதாக, உலகின் முன்னணி செல்போன் உற்பத்தி நிறுவனமான, ஃபாக்ஸ்கான் தெரிவித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்பு களை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, உலகின் முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடுகளை செய்ய தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகின்றன.

தைவானை தலைமையிடமாக கொண்டு செயல்படும் செல்போன் உற்பத்தி நிறுவனமான ஃபாக்ஸ் கான், தமிழ்நாட்டில்ஸ்ரீபெரும்புதூரில் ஏற்கனவே தனது உற்பத்தி ஆலையை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில், சென்னையை அடுத்த ஒரகடத்தில் ஐபோன்களின் வெளிப்புற உறைகளை உற்பத்தி செய்வதற்காக, ஒரு புதிய ஆலையை அமைக்க திட்டமிட்டுள்ளதாக, 'THE ECONOMIC TIMES' ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கான, கட்டுமானப் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மேலும் ஒரு உற்பத்தி பிரிவை தொடங்க இருப்பது பெருமையாக இருப்பதாக ஃபாக்ஸ் கான் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஐபோன்களை உற்பத்தி செய்யும் ஆப்பிள் நிறுவனம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து ஐபோன்களின் வெளிப்புற உறைகளை கொள்முதல் செய்து வருகிறது. இந்நிலையில், ஒரகடத்தில் தற்போது தொடங்க உள்ள ஃபாக்ஸ் கான் நிறுவனத்திட மிருந்தும் வெளிப்புற உறைகளை வாங்கும் என அந் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.



நேற்று (21.06.2025) சென்னை, செம்மஞ்சேரி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் 16.06.2025 முதல் 21.06.2025 நடைபெற்ற "கலைச்சிற்பி" மாநில அளவிலான பயிலரங்க நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பயிலரங்கில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கி, விழா சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு. ப.சந்தரமோகன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், செம்மஞ்சேரி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர். வே. வள்ளிநாயகம் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.